www.tamilarangam.net

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

அரசியல் தொடர் அற்புதன் எழுதுவது

## பிரேமாவிடம் மாத்தையா சொன்ன கதை!




இலங்கை அரசுடன் புலிகள் பேச்சு நடத்துவதால், இந்தியா புலிகளுடன் யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என்று ஈரோஸ் தலைவர் பாலகுமார் கோரிக்கை விடுத்தார்.

அத்தோடு நிறுத்தவில்லை, இந்தியப் படையினராலும், அவர்களுடன் நின்ற இயக்கங்களாலும் 1989ம் ஆண்டின் ஆரம்பத்தில் காணாமல் போகச் செய்யப்பட்ட தமது இயக்க உறுப்பினர் பட்டியல் ஒன்றையும் பாலகுமார் வெளியிட்டார்.

அந்தப் பட்டியலில் கூறப்பட்ட விபரங்களைப் பார்ப்போம்.

1. 17.03.89 அன்று திருமலை கப்பல் துறையில் தம்பலகாமத்தில் இருந்த இந்தியப் படையினரால் கைதான தோழர் குணரட்ணம் பரமேஸ்வரன் இன்றுவரை வீடு திரும்பவில்லை.

2. 10.05.89 அன்று மட்டக்களப்பு புன்னச்சோலையில் வைத்து கடத்தப்பட்ட தோழர் குகதாஸ் (ஆனைக்குட்டி) சடலமாக மீட்கப்பட்டார்.

3. 23.05.89 அன்று மூதூர் 64ம் கட்டையில் வைத்து தொழர் சேகு முகமட் சகாப்தீன் (கசாலி), தோழர் நடராஜா அமிர்தலிங்கம் (அமிர்தம்) ஆகிய இருவரும் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.


ஜே.வி.பி.யால் கொல்லப்பட்டவர்

4. 23.05.89 அன்று கப்பல்துறையில் தோழர் கனகராசா, ஆதரவாளர் தேவசகாயம் ஆகியோர் கொல்லப்பட்டனர்.

5. 2.06.89 அன்று நைனாமடு இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட தோழர் செல்வரெத்தினம், அல்லது வெள்ளைக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் பின்னால் தமிழ் பேசும் மக்களுக்கு பூரண பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற அடிப்படையில் ஆயுதங்களை கையளித்த எம்மீது ஏவிவிடப்பட்ட இப்படுகொலைகள் ஒப்பந்தத்துக்கு முன்னாலுள்ள சூழ்நிலைக்கு நாம் செல்வதற்கே எம்மை உந்தித் தள்ளுகின்றன" என்று பாலகுமார் தெரிவித்திருந்தார்.

### முரண்பாடுகள்

ஈரோஸ் இயக்கத்திற்குள் இரண்டு விதமான போக்கு இருந்தது. பாலகுமார் போன்றோர் புலிகளுக்கு ஆதரவான போக்கை கொண்டிருந்தனர். சங்கர் ராஜி போன்றோர் இந்தியாவுக்கு சார்பான போக்கை கொண்டிருந்தனர்.

சங்கர் ராஜிக்கு இந்திய உளவுப் பிரிவான 'றோ' வுடன் இருந்த நட்பும் தொடர்பும் இந்தியச் சார்பு" நிலைக்கு அவரைத் தள்ளியிருந்தன.

உள் பிரச்சனையை ஈரோஸ் வெளியே காட்டிக் கொள்ளாவிட்டாலும் பாலகுமாரின் பேச்சுக்கும், சங்கர்ராஜியின் பேச்சுகளுக்கும் இடையே முரண்பாடுகள் தென்படவே செய்தன.

வீரகேசரியில் அன்று இருந்த சுறுசுறுப்பான தலைமைச் செய்தியாளர்களில் ஒருவர் அன்டன் எட்வர்ட். அரசியல் கட்சிக்காரர்கள் முதற்கொண்டு அமைச்சர்கள்வரை பரிச்சயம். எல்லோரையும் துரத்தித் துரத்தி செய்தி கறப்பதில் ஆள் விண்ணர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தம், இலங்கை 'அரசு, புலிகள் பேச்சு போன்றவை' தொடர்பாக பல்வேறு உள்ளக விபரங்களை திரட்டி வெளியிட்டு வந்தவர்.

சங்கர் ராஜியிடம் பத்துக் கேள்விகளைக் கொடுத்து பதில்களை உருவியிருந்தார் அன்டன்.

அதில் ஒரு கேள்விக்கு சங்கர்ராஜு அளித்த பதில்:

**கேள்வி: ஜனாதிபதியைச் சந்தித்தபோது இந்திய இராணுவம் பற்றி பேசியிருந்தீர்களா?**

**பதில்:** அங்கே அப் பேச்சு எழவில்லை. எமது கருத்து என்னவென்றால், வடக்கு-கிழக்கு இன்னமும் இணைக்கப்படவில்லை. மாகாண சபைக்கு போதிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. தமிழ் மக்களுக்கு போதிய பாதுகாப்பில்லை. இந்நிலையில் இந்தியப் படையின் வெளியேற்றம் மக்களை நட்டாற்றில் விட்டுவிடும். எனவே அதற்கு முன்னர் சகல தரப்பாருடனும் பேச வேண்டும்.

### எங்கும் குழப்பம்

அரசும், புலிகளும் பேசிக் கொண்டிருக்க, தென்னிலங்கையில் ஜே.வி.பி.யின் நடவடிக்கைகளும் உச்சக்கட்டத்தை அடைந்திருந்தன.

ஜே.வி.பி.யின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு தென்னிலங்கை மக்கள் அஞ்சி நடுங்கினார்கள்.

1989 ஜூலையில் வேலை நிறுத்தம் ஒன்றுக்கு ஜே.வி.பி. அழைப்பு விடுத்தது. அடுத்தநாளே தென்னிலங்கை எங்கும் வெற்றிகரமான வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

வழக்கமாக தொழிற் சங்கங்கள்தான் வேலை நிறுத்தம் செய்யுமாறு தொழிலாளர்களுக்கு கோரிக்கை விடுப்பதுண்டு.

ஆனால், எந்த ஒரு தொழிற் சங்கத்துடனும் கலந்தாலோசிக்காமல் ஜே.வி.பி. நடத்திய வேலை நிறுத்தம் மாதக்கணக்காக நீடித்தது.

தென்னிலங்கையில் சில கடைகளில் 'இங்கே இந்தியப் பொருட்கள் விற்கப்படுவதில்லை' என்று எழுதித் தொங்கவிட்டிருந்தனர்.

இந்திய துணியில் ஆடை அணிந்திருந்த சில இளைஞர்களைப் பிடித்து நிர்வாணமாக்கி ஊர்வலமும் நடத்தப்பட்டது.

ஜே.வி.பி. இயக்கத் தலைவர் ரோஹன விஜயவீரா ஒரு காலத்தில் சண்முகதாசன் தலைமையிலான சீனசார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்தவர்.

அதேவேளை கொழும்பில் நடைபெற்ற தமிழர்களுக்கு எதிரான ஊர்வலம் ஒன்றில் கலந்துகொண்டு 'மசால வடை எமக்கு வேண்டாம்' (மசால வடே அப்பிட்ட எப்பா) என்று அந்தக் காலத்திலேயே கோஷம் போட்டும் சென்றவர்.

ஜே.வி.பி.யைவிட இந்திய எதிர்ப்பில் முன்னின்றார் பிரேமதாசா. படையை வாபஸ் பெறுங்கள். அல்லது முகாம்களுக்குள் முடக்குவோம் என்றும் காலவரையறை விதித்தார்.

இவ்வாறான கட்டத்தில் ஜே.வி.பி.யின் பிரதான கோஷம் அமுங்கத் தொடங்கியது.

எனினும் ஜே.வி.பி.யினர் 1989ல் பகிரங்கமாக இனவாதம் பேசுவதை தவிர்த்துக் கொண்டனர்.

மறைமுகமான இனவாதப் பிரசாரங்கள் நடத்தப்பட்டன. திருமலையில் வெற்றுக்காணிகளுக்குள் தமிழ் அகதிகள் கொண்டுசென்று குடியேற்றப் படுகின்றனர் என்று ஜே.வி.பி.யின் இரகசிய வானொலி அறிவித்தது.

தமிழ் இயக்கங்கள் கொழும்பில் நின்ற போதும் சரி, பின்னர் புலிகள் கொழும்பில் நடமாடியபோதும்சரி ஜே.வி.பி. தமிழ் இயக்கங்களுடன் சீண்டாமல்தான் நடந்து கொண்டது.

ஜே.வி.பி. 1971இல் நடத்திய கிளர்ச்சியின் போதும், 1987–89இல் நடத்திய கிளர்ச்சியின் போதும் சூழ்நிலைதான் அவர்களுக்கு பாதகமாக மாறியது.

1970இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி பதவிக்கு வந்திருந்தது. இடதுசாரிக் கட்சிகள் அதில் அங்கம் வகித்தன. பிரபல இடதுசாரித் தலைவர்கள் என்று கருதப்பட்டோர் முக்கிய அமைச்சர்களாக இருந்தனர்.

இடதுசாரி அரசாங்கம். சோசலிச அரசாங்கம் என்றெல்லாம் பெரிதாகப் பீற்றிக் கொண்டனர். அதனை உள்நாட்டு மக்களும், சோசலிச நாடுகளும்கூட நம்பிவிட்டன.

அந்தப் பொய் அம்பலமாகி, இடதுசாரி அரசாங்கம் என்ற சாயம் வெளுக்கும் வரை காத்திருக்காமல் ஜே.வி.பி. கிளர்ச்சியில் குதித்தது.

அரசாங்கமும் சோசலிசம் பேசியது. அரசைக் கவிழ்க்க கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களும் சோசலிசம் பேசினர். மக்களுக்கு ஒரே குழப்பம். உலக சோசலிச நாடுகள்கூட ஜே.வி.பி. புரட்சியை அதிருப்தியோடுதான் பார்த்தன.

உலக ஆதரவுடன் ஜே.வி.பி.யின் முதல் கிளர்ச்சியை நசுக்கிப் போட்டார் சிறிமாவோ அம்மையார்.

இரண்டாவது கிளர்ச்சியின்போது (1987–89) ஜே.வி.பி. முன்வைத்த பிரதான கோஷம் இந்திய எதிர்ப்புக் கோஷமாகும்.

ஜே.ஆர். ஜனாதிபதியாக இருந்தவரை ஜே.வி.பி.யின் இந்திய எதிர்ப்புக் கோஷம் மக்கள் மத்தியில் எடுபட்டது.

ஏனெனில், ஜே.ஆர். இந்தியப் படையை இலங்கைக்கு கொண்டுவந்து, இந்திய ஆக்கிரமிப்புக்கு வழிவிட்டவர் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளாகியிருந்தார்.

ஆனால், பிரேமதாசா ஜனாதிபதிப் பதவிக்கு வந்ததும் நிலவரம் தலைகீழானது.

### ஆயுதபாணிகள்

படைவீரர்கள், அதிகாரிகள், பொலிசார் ஆகியோரின் குடும்பங்களில் ஜே.வி.பி. கைவைக்கத் தொடங்கியதும் அதன் வீழ்ச்சிக்கு வழிகோலியது.

அக்கட்டத்தில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரத்ன 'அடிக்கு அடிதான் மருந்து' என்ற கொள்கை உடையவர்.

ஜே.வி.பி. என்று கருதப்பட்டவர்கள் விடயத்தில் ஈவிரக்கம் தேவையில்லை என்று படையினருக்கு உத்தரவிட்டார்.

தென்னிலங்கையின் சகல அரசியல் கட்சிகளுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்கும் ஆயுதங்களை அள்ளிக் கொடுத்தார் ரஞ்சன்.

தங்களுக்கு போட்டியான கட்சிகள் என்று பாரபட்சம் காட்டாமல், அக்கட்சிகள் கேட்ட எண்ணிக்கைப்படி ஆயுதங்கள் ரஞ்சனால் வழங்கப்பட்டன.

ஆயுதங்களை பெற்ற கட்சிகளிடம் பயிற்சி பெற்ற உறுப்பினர்கள் இல்லை. தமிழ்க் கட்சிகளின் உதவிகளை நாடினார்கள். தமிழ்க் கட்சிகளில் இருந்து ஒதுங்கியிருந்த உறுப்பினர்களையும் பயன்படுத்திக் கொண்டனர்.

தெருக்களில் பிணங்கள் குவிந்தன. படையினரால் கொல்லப்பட்டவர்கள் யார்? ஜே.வி.பியினரால் கொல்லப்பட்டவர்கள் யார் என்று தெரியாமல் மக்கள் குழம்பி நின்றனர்.


சங்கர்ராஜி

எங்கும் கொலை கலாசாரம் தலைவிரித்தாடியது. ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டும் நடவடிக்கைகளுக்கு மக்களின் குறிப்பிட்ட பகுதியினர் மட்டுமல்ல, தென்னிலங்கை அரசியல் கட்சிகளின் மறைமுகமான ஆதரவும் இருக்கவே செய்தது.

ஜே.வி.பி.யை ஒழித்துக் கட்டும்வரை தங்களால் அரசியல் நடத்தமுடியாது என்று கருதிய சகல கட்சிகளும், ஜே.வி.பிக்கு எதிரான வேட்டைகளை மௌனமாக ஆதரித்தன.

தற்போது ஜே.வி.பி.யை ஒழிக்க ஐ.தே. கட்சி எடுத்த நடவடிக்கைகளை விமர்சிக்கும் பலர் அப்போது ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கைகளை வரவேற்றுக் கொண்டிருந்தனர்.

### இறுதிக்கட்டம்

ஜே.வி.பி. தனது வீழ்ச்சிக்கான இறுதிக் கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தது.

ஜே.வி.பி. வீழ்ச்சியடைந்தால் பிரேமதாசாவின் கை ஓங்கும் என்பதையும், பின்னர் கடுமையான தொனியில் தம்முடன் அவர் பேசக்கூடும் என்றும் பிரபாகரன் எதிர்பார்த்தார்.

ஆனால், மாத்தையா, யோகி போன்றோருக்கு பிரேமதாசாமீது சிறிது நம்பிக்கை ஏற்பட்டிருந்தது.

இலங்கை அரசுடனான பேச்சு வார்த்தையில் புலிகள் சார்பாக மாத்தையாவும் கலந்து கொண்டார்.

புலிகள் இயக்க அரசியல் பிரிவான விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் கட்சியாகவும் பதிவு செய்யப்பட்டது.

அதன் தலைவராக மாத்தையாவும், செயலாளராக யோகியும் இருந்தனர்.

விடுதலைப் புலிகள் இயக்கம் என்ற பெயரில் நேரடியாக அரசுடன் பேசுவதோ, தேர்தல்கள் போன்றவற்றில் ஈடுபடத் தயார் என்று காண்பிப்பதுவோ கூடவே கூடாது என்பது பிரபாகரனின் உறுதியான நிலை.

"வேண்டுமானால் வேறு ஒரு பெயரில் உங்கள் பேச்சு முயற்சிகளை வைத்துக்கொள்ளுங்கள்" என்று பிரபாகரன் கூறியிருந்தாராம்.

பிரேமதாசாவுடனான சந்திப்பில் முதன் முதலில் கலந்துகொண்டபோது மாத்தையா பிரேமதாசாவிடம் பின்வருமாறு கூறினாராம்:

"நான் சிறுவனாக இருந்தபோது நீங்கள் வடமராட்சிக்கு விஜயம் செய்திருந்தீர்கள். அப்போது என் கையில் இருந்த சிங்கக் கொடியை அசைத்து உங்களை வரவேற்றேன்."

மாத்தையா கூறியதைக் கேட்ட பிரேமதாசாவுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. புலிகளுடன் மோதல் தொடங்கிய பின்னரும் கூட மாத்தையா தன்னிடம் கூறியதை தன்னைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகள் பலரிடம் சொல்லி மகிழ்ந்தார் பிரேமதாசா.

"சிங்கள மக்களும், தமிழ் மக்களும் இந்த நாட்டின் மைந்தர்கள். எங்கள் பிரச்சனையை எமக்குள் பேசித்தீர்த்துக் கொள்ளுவோம். இந்தியாவுக்கு இதில் என்ன வேலை இருக்கிறது. இந்தியப்படை திரும்பிச் செல்லவேண்டும்" என்றும் மாத்தையா அறிக்கைவிட்டிருந்தார்.

ஆனால், பிரபாகரன் மட்டும் தன்னை சந்தித்தவர்களிடம், 'பிரேமதாசாவும் நியாயமாக நடக்கப்போவதில்லை. நானும் என்னை சார்ந்தவர்களும் போருக்கு ஆயத்தமாக இருக்கிறோம்' என்று கூறிக் கொண்டிருந்தார்.

இதற்கிடையே ஈ.பி.ஆர்.எல்.எஃப். இயக்கத்தினரை ஜனாதிபதி பிரேமதாசா சந்தித்து கலந்துரையாடினார்.

இச் செய்தியைப் பார்த்ததும் புலிகள் கோபப்பட்டனர். கண்டன அறிக்கை தயாரானது. அரசு-புலிகள் பேச்சில் முதல் முறுகல் நிலை ஏற்பட்டது.

(தொடர்ந்து வரும்)

---

## "இளையோர் அஞ்சக்கூடாது"

**1976ல்** ஆகஸ்ட் 4 முதல் 22 வரை அணிசேரா நாடுகள் மாநாடு கொழும்பில் நடைபெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணியானது வன்செயல் இயக்கமொன்றில் ஈடுபட இக்காலப் பகுதியை தேர்ந்தெடுத்தது.

ஒருவேளை; தமிழர்களின் அவல நிலையை, அம் மாநாட்டிற்கு வந்திருந்த உலகத்தலைவர்களுக்கு தெரியப்படுத்த அவர்கள் அவ்வாறு செய்திருக்கலாம்.

பின்வரும் குற்றச் செயல்கள் யாழ்ப்பாணத்தில் புரியப்பட்டன; பேருந்துகள் எனப்படும் பஸ் வண்டிகள், புகைவண்டிப் பெட்டிகளுக்குத் தீயிட்டமை.

மாவிட்டபுரத்தில் மின் கடத்தி (ற்ரான்ஸ்போமர்) ஒன்றை வெடிவைத்துத் தகர்த்தமை, அத்துடன் அரசாங்கச் சொத்துகளுக்கு எதிரான நடவடிக்கைகள் எடுத்தமை. அத்துடன் ஆகஸ்ட் 4ம் திகதியன்று திரு.அருளம்பலத்தை (நல்லூர் பா.உ) கொல்ல எத்தனித்தமை முதலியனவாம்.

புகையிரத வண்டிகளுக்கு தீ வைக்கப்பட்ட சம்பவங்கள் மூன்றையும் அதே விதத்தில் இ.போ.ச. பேருந்துகள் நான்கு தடவைகள் தாக்கப்பட்டதையும் திரு.செனிவிரத்ன குறிப்பிட்டுள்ளார்.

ஒரு சம்பவத்தின்போது பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய வேண்டியிருந்தது எனவும் கூறிய அவர், அப்போது பஸ்வண்டி என்னும் பேருந்து ஒன்று செல்லவிடாமற் தடுக்கப்பட்டு, நடத்துநர் வசமிருந்த பணச் சேகரிப்புக்கள் கொள்ளையிடப்பட்டு, அந்த வண்டிக்கும் தீ வைக்கப்பட்டது என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் நோக்கம், இலங்கைக்கு வருகை தந்தோரின் கவனத்தை ஈர்ப்பதாக இருந்ததாயின், அவர் தம் மனதில் இன்னொன்றையும் நிரூபிக்க அது உதவியிருக்கும். அதாவது, இத்தீவின் ஒரு பாகத்தில், சட்டத்தினை உதாசீனமாகப் பொருட்படுத்தாதுவிடும் நிலையொன்று நிலவியது எனவும், சமாதானம் ஒழுங்கு என்பவற்றின் எதிரிகளால் அரசாங்கச் சொத்து வேண்டுமென்றே நாசமாக்கப்பட்டது எனவும் அது அவர்களுக்கு நிரூபித்திருக்கும்.

1976 ஜூலை மாதம் 31ம் திகதியிடப்பட்ட ஓர் அறிக்கை யாழ்ப்பாணம் மாவட்ட உளவறியும் பணியக அலுவலரினால் கொழும்பு 'ஐ.எஸ்.டி' பொலிஸ் அத்தியட்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.



அந்த அறிக்கை, அதே நாள் விடுதலையாகிய தமிழ் இளைஞர்களுக்கு யாழ்ப்பாணம் தமிழர் விடுதலைக் கூட்டணி அலுவலகத்தில் நடைபெற்ற வரவேற்பு உபசாரக் கூட்டம் ஒன்றை விபரிப்பதாக இருந்தது.

அவ்வறிக்கையில் காணப்பட்டிருந்த விடயங்கள் பின்வருமாறு:

தடுப்புக் காவலில் இருந்து விடுதலையான பதினைந்து இளைஞர்களில் பன்னிரண்டு பேர் தமிழர் விடுதலைக் கூட்டணியாலும், தமிழ் இளைஞர் முன்னணியாலும் அழைக்கப்பட்டு அந்த கூட்டத்தில் சமூகமளித்திருந்தனர்.

அவர்தம் தோள்கள்மீது உதயசூரியன் கொடிகளை இடுவதன்மூலம் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உதயசூரியன் கொடிகளை அமிர்தலிங்கம் வழங்கினார்.

அங்கு திரு.மு.சிவசிதம்பரம் கூறியதாவது: "தலைவர்களான. எம்மிலும் பார்க்க இங்குள்ள இளைஞர்கள்தாம் வீரப்புருஷர்கள்; ஏன் என்றால் இந்த இளைஞர்கள் தடுப்புக்காவல் முகாம்களுக்கு சென்று அனுபவித்த துன்பங்களை தமிழ்த் தலைவர்கள் எல்லோரும் அங்கு போய் அனுபவித்தவர்கள் அல்லர்.

துரையப்பா கொலைக்காக இப்போது குற்றம் சாட்டப்பட்டுள்ள இளைஞர்கள் தமிழ் சட்டத்தரணிகளால் நிச்சயம் காப்பாற்றப்படுவர். அந்த வழக்கு நாளை எதிர்பார்த்து தமிழ்ச் சட்டத்தரணிகள் காத்திருக்கின்றனர்.

இளைஞர்களை தலைவர்கள் வழி நடத்திச் செல்வர். எனவே விடுதலைப் போராட்டத்தில் இறங்க இளையோர் அஞ்சத் தேவையில்லை. தலைவர்களுடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிச் செல்வதே இளையவர்கள் செய்ய வேண்டிய கடமையாகும்" என்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் இளைஞர்களுக்குமிடையே உள்ள தொடர்பை இதனிலும் பார்க்க தெளிவாக்கலாமோ? இச் சொற்பொழிவுகள் சிலவற்றை தெளிவாகக் காட்டுகின்றன என நான் கருதுகிறேன்.

தமிழர் கூட்டு முன்னணி அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியானது இளைஞர்களின் நடவடிக்கை தொடர்பாக முழு அனுதாபம் கொண்டிருந்தது. தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட இளைஞர்கள் தீர புருஷர்கள் என வர்ணிக்கப்பட்டனர்.

துரையப்பாவை கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டோர் தமிழ்ச் சட்டத்தரணிகளால் காப்பாற்றப்படுவது திண்ணம்.

*சன்சோனிக்கமிஷன் அறிக்கையில் இருந்து.*
*(24.12.1981ல் வெளியானது)*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்